**B**

**CCE RR/PR/ NSR/NSPR**
**Reduced Syllabus**

ಕರ್ನಾಟಕ ಶಾಲಾ ಪರೀಕ್ಷೆ ಮತ್ತು ಮೌಲ್ಯನಿರ್ಣಯ ಮಂಡಲಿ,
ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003

**KARNATAKA SCHOOL EXAMINATION AND ASSESSMENT BOARD,**
**MALLESHWARAM, BENGALURU – 560 003**

ಮಾರ್ಚ್/ಏಪ್ರಿಲ್ 2024 ರ ಪರೀಕ್ಷೆ - 1

**MARCH/APRIL 2024 EXAMINATION - 1**

ಮಾದರಿ ಉತ್ತರಗಳು

**MODEL ANSWERS**

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T** CODE NO. : **10-T**

ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

**Subject : First Language — TAMIL**

(ಶಾಲಾ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಎಸ್.ಎಸ್.ಆರ್. / ಎಸ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)
**(Regular Repeater / Private Repeater / NSR / NSPR)**

ದಿನಾಂಕ : 25. 03. 2024 ] [ ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100

**Date : 25. 03. 2024 ]** **[ Max. Marks : 100**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுதல் :** **6 × 1 = 6**

1. கிரிக்கெட் பந்தயத்தில் இந்தியா வென்றது

(A) பொருளாகுபெயர் (B) இடவாகுப்பெயர்

(C) காலவாகுப்பெயர் (D) சினையாகுப்பெயர்

***Ans.* :**

(B) இடவாகுப்பெயர்

2. சொற்கள் பல அடுக்கி வருவது

(A) சீர் (B) அடுக்குத்தொடர்

(C) இரட்டைக்கிளவி (D) இடைச்சொல்

***Ans.* :**

(B) அடுக்குத்தொடர்

3. போர்தொடுக்க வந்தவனை எதிர் கொள்ளுதல்

(A) வெட்சி (B) வஞ்சி

(C) காஞ்சி (D) உழிஞை

***Ans. :***

(C) காஞ்சி

4. செய்யுளில் ஐந்து சீர்களை கொண்டது

(A) அளவடி (B) சிந்தடி

(C) நெடிலடி (D) அளவடி

***Ans. :***

(C) நெடிலடி

5. செய்யுளைச் சொல்லால் அழகு செய்வது

(A) அணி (B) சொல்லணி

(C) பொருளணி (D) வேற்றுமையணி

***Ans. :***

(B) சொல்லணி

6. ஓடி விழுந்தான் ஓடி என்பது

(A) பெயரெச்சம் (B) வினைமுற்று

(C) வினையெச்சம் (D) பெயர்ச்சொல்

***Ans. :***

(C) வினையெச்சம்

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை நிரப்புக : 4 × 1 = 4**

7. பிரம்படி கொடுத்தவன் : பாண்டிய மன்னன் ;
பிட்டுக்கு மண் சுமந்தவன் : ........................... .

***Ans. :***

சொக்கநாதன்

8. பகலில் ஒளி தருவது : சூரியன்;
இரவில் ஒளி தருவது : .......................... .

***Ans.* :**

சந்திரன்

9. குறை குடம் : கூத்தாடும்;
நிறை குடம் : .......................... .

***Ans.* :**

நீர் தழும்பாது

10. ஆக்கம் என்பது : செல்வம்;
மாசு என்பது : .......................... .

***Ans.* :**

குற்றம்

**III. ஒரு தொடரில் விடை தருதல் : 7 × 1 = 7**

11. இறைவன் ஆனந்த மாக்கடலாவது எப்போது ?

***Ans.* :**

பாசக் கட்டினை ஒழிக்கும்போது.

12. நல் அமுது என்று பாரதிதாசன் எதனைக் கூறுகிறார் ?

***Ans.* :**

எமது தாய்மொழி இனிமை, இன்பம் தருவதற்கு கிடைத்த நல் அமுதம்.

13. எவ்வெவற்றை நீக்கி வாழ்வது அறமாகும் ?

***Ans.* :**

பொறாமை, பேராசை, கடுங்கோபம், கடுஞ்சொல்.

14. திரிகடுகத்தின் ஆசிரியர் யார் ?

***Ans.* :**

நல்லாதனார்

15. நீ எத்தகைய எண்ணத்தைக் கூடு என்கிறார் நாமக்கல் கவிஞர் ?

***Ans.* :**

இந்த நாள் முதல் 'இந்தியநாடு என்னுடைய நாடு' என்ற எண்ணத்தோடு வாழ்க.

16. இலக்கணம் என்றால் என்ன ?

***Ans.* :**

பிழையின்றி பேசுவதற்கும், எழுதுவதற்கும் பயன்படுவது இலக்கணம்.

17. பெண்கள் எவை போயின என்று கும்மியடித்தனர் ?

***Ans.* :**

நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின என்று கும்மியடித்தனர்.

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருதல் : 10 × 2 = 20**

18. பெண்கள் பாரினில் எதை நடத்த வந்தனர் என்று பாரதியார் குறிப்பிடுகிறார் ?

***Ans.* :**

i) பட்டங்கள் ஆள்வதும் 1

ii) சட்டங்கள் செய்வதும் பாரினில் நடத்த வந்தனர். 1

19. பாணன் தான் கொண்டு வந்த பரிசுப்பொருள் யாதென்பதற்குக் கூறிய முதல் மூன்று சொற்கள் யாவை ?

***Ans.* :**

பாணன் கொண்டு வந்த பரிசு, களபம், மாதங்கம், வேழம். 2

20. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்புகள் யாவை ?

***Ans.* :**

i) வறியவர்க்கு ஒரு பொருளை கொடுத்து உதவுதல். 1

ii) நிலையாமையை அறிந்து நல்வழி நிற்றல் எவ்வுயிருக்கும் தீங்கு செய்யாதிருத்தல். 1

21. காளைகளுக்குச் சொல்வது போல் மக்களுக்குப் பட்டுக் கோட்டையார் கூறுவது என்ன ?

***Ans.* :**

i) மலையில் தோன்றும் அருவிகள் தரைக்கு வந்ததும் ஒன்றாய்க் கலக்கின்றன. 1

ii) மனிதகுலம் மட்டும் உயர்வும் தாழ்வும் வளர்த்து ஒற்றுமையில்லாமல் அடித்துக் கொள்கிறது. 1

22. பொருந்தா இயல்புடைய இரண்டு உயிர்கள் யாவை ?

***Ans.* :**

i) மனிதன் மட்டும் தனது இயல்பை மறந்தும் 1

ii) மனிதத்தன்மையைத் தொலைத்தும் அதன் புனிதத்தையே மறந்து வாழ்கிறானே. 1

23. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி யாது ?

***Ans.* :**

i) இவன் தந்தை இவனை பெற்றெடுக்க என்ன தவம் செய்தானோ 1

ii) என்று பிறர் பேசும்படி செய்வது. 1

24. C.F.C. ஓசோனில் ஏற்படுத்தும் பாதிப்பு யாது ?

***Ans.* :**

i) குளோரோ ஃப்ளோரோ கார்பன் இந்த ரக ரசாயனத்தை தீயணைப்புக் கருவிகளுக்கு பயன்டுத்துகிறோம். 1

ii) இதுதான் ஓசோனுக்கு எமன். 1

25. இளைஞன் தன்னை எதைப்போல் வழிநடத்திக் கொள்ள வேண்டும் என்று வைரமுத்து கூறுகிறார் ?

***Ans.* :**

i) கழுதையில் சவாரி செய்கிறவன் கழுதையின் வாயருகில் கேரட்டை காட்டிக் கொண்டே போவதைப் போல் 1

ii) உனது இலட்சியத்தைச் காட்டிக் கொண்டே உன்னை நீ வழி நடத்த வேண்டும். 1

26. உரிச்சொல் என்றால் என்ன ? அதன் வகைககள் யாவை ?

***Ans.* :**

i) செய்யுளுக்கே உரியதாய் வரும் சொல் உரிச்சொல். 1

ii) ஒரு குணம் தழுவிய உரிச்சொல்

பல குணம் தழுவிய உரிச்சொல். 1

27. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

***Ans.* :**

i) வெண்பா செப்பலோசை உடையது வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் 1

ii) பெற்றுவரும் ஈற்றடி மூன்று சீர்களாகவும், ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் வரும். 1

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை எழுதுதல் : 4 × 3 = 12**

28. உழவுத்தொழிலின் உயர்வையும் உழவர்களின் உயர்வையும் வள்ளுவர் எவ்வாறு குறிப்பிடுகிறார் ?

***Ans.* :**

i) உலகம் தானே சுற்றினாலும் அது உழவுத் தொழிலின் பின்னே தான் சுற்றும் 1

ii) மற்றவர்கள் உண்ணும் உணவை உழுது கொடுத்து தாமும் உண்டு வாழ்பவரே வாழ்பவர். 1

iii) தம் கையால் உழுது உண்பதை இயல்பாகக் கொண்டவன், பிறரிடம் சென்று இரக்கமாட்டாள். 1

29. சிறு பஞ்சமூலம் நூலின் சிறப்பினை விளக்குக.

***Ans.* :**

i) நற்குணமுடையாரைச் சேருங்கள்; பிறர்பொருளைக் கவராதீர்கள். தீய குணமுடையோரிடம் நட்பு கொள்ளாது 1

ii) நீங்கியிருங்கள் நன்கு யோசித்து தீய சொற்களையும் பேசாது 1

iii) இருங்கள் காலான் வருவான் இது உண்மை என்று காரியாசன் கூறுகிறார். 1

30. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளை கூறுக.

***Ans.* :**

i) பிரம்மாண்டமான பனிக்கட்டிகள் உருகும் 1

ii) கடல் மட்டம் உயரும் 1

iii) நான்கு கோடி முதல் எட்டு கோடி மக்கள் வேறு இடம் தேட வேண்டியிருக்கும். 1

31. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர நேரும் ? அதன் விளைவு யாது ?

***Ans.* :**

i) உனது பதினேழாவது வயதிலிருந்து இருப்பத்து நான்கு வயதிற்குள் உன் திசையை தீர்மானிக்கத் தெரிந்து கொள்ளாவிட்டால் 1

ii) உனது பயணத்தில் நீ பாறையில் மோதிய பந்தாய் திரும்பிவர வேண்டியிருக்கும். 1

iii) அப்படிப்படும் அடியினால் முப்பது வயதிலேயே உனக்கு முதுமை வந்துவிடும். 1

**VI. குறிப்பு வரைதல் : $2 \times 3 = 6$**

32. புறநானூறு

***Ans.* :**

i) புறநானூறு - புறம் + நான்கு + நூறு 1

ii) புறப்பொருளைக் கூறும் நானூறு பாடல்களை கொண்டது. 1

iii) இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். புலவர் பெருமாட்டியாகிய பொன்முடியாரால் பாடப் பெற்ற பாடல். 1

33. புரட்சிக்கவி பாரதிதாசன்

***Ans.* :**

i) சமுதாய மறுமலர்ச்சிக்காகவே பாடியவர் புரட்சிக்கவி என அழைக்கப்பட்டார். 1

ii) அழகின் சிரிப்பு, இருண்டு வீடு, குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு என பல இலக்கியங்களைப் படைத்தவர். 2

**VII. கீழ்வரும் அணியைச் சான்றுடன் விளக்குதல் : 1 × 3 = 3**

34. பிறிதுமொழிதல் அணி சான்றுடன் விளக்குக.

***Ans.* :**

i) கவிஞன் தான் சொல்லக் கருதிய பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்துவதற்காக பிறிதொன்றினைச் சொல்வது பிறிதுமொழிதல் அணி 1

ii) (எ.கா.) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப்பெயின். 1

iii) மயில் இறகுகளை அதிகமாக ஏற்றினால் வண்டியின் அச்சு முறியும் என்ற கருத்தின் மூலம் விளக்குவதாகும். 1

**VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குதல் : 3 × 3 = 9**

35. ''பால் வார்த்தாலும்
விஷம் குறைக்காது பாம்பு''

***Ans.* :**

இடம் : இயல்பு கவிதை 1

விளக்கம் : பால் வார்த்தாலும் பாம்பு தன் விஷத்தைக் குறைக்காத இயல்பு உடையது. 2

36. ''சென்னையிலுள்ள எந்த விடுதியில் இந்த வடை தயாரிக்க பட்டதோ? மிகவும் சுவையாக இருக்கிறதே''.

***Ans.* :**

இடம் : உறுசுவை உரையாடல் (உரைநடை) 1

விளக்கம் : பேராசிரியர் சேதுப்பிள்ளைக்கு மாணவர்கள் கருத்தூண்றி தயிர் வடையை தயாரித்து பேராசிரியருக்கு கொடுத்தனர் அதை சாப்பிட்ட பேராசிரியர் இவ்வாறு கூறினார். 2

37. ''அவர்கள் வாழ்வில் ஒருபோதும் வெறுப்பு கொள்ள மாட்டார்கள்''.

***Ans.* :**

இடம் : உண்டாலம்ம இவ்வுலகம் (உரைநடை) 1

விளக்கம் : அரிய பண்பு அவர்கள் வாழ்க்கையை சிந்தனையுடன் அணுகுவது ஆகும். சோம்பல் ஒருபோதும் அவர்களை நெருங்காது. 2

**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குதல் : 1 × 3 = 3**

38. ''எறும்பு ஊரக் கல்லும் தேயும்''.

*அல்லது*

''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா''.

***Ans.* :**

மாணவர்கள் தன் அறிவும், சிந்தனையும் வளர வேண்டுமென்றால் படித்து. பல சிந்தனைகளை வளர்க்க வேண்டும் படிக்க,படிக்க அறிவு வளரும் எறும்பு ஊர ஊர கல்லும் தேயும் அதைப்போல நல்ல சிந்தனை அறிவு மனதிடம் ஆகியவை அவர்களை சமுதாயத்தில் வளர செய்யும். 2

சமுதாயமும் அவர்கள் மதித்து மரியாதையுடன் நடத்தும். ஆகையால் மாணவர்கள் புரிந்து கொண்டு தன் வாழ்வை தன் குடும்பத்துடனும் சமுதாயத்துடனும் வாழ வேண்டும். 1

அல்லது

***Ans.* :**

சிறுவயதில் நாம் என்ன பழக்கவழக்கங்களுடன் வாழுகின்றோமோ அதே பழக்கம் தான் முதுமையிலும் இருக்கும் 5 வயதில் கற்றதை தான் 1

ஐம்பது வயதிலும் அந்த பழக்கவழக்கம் மாறாது என்பதை சுட்டிகாட்டுவதே இப்பழமொழி குறிப்பிடுகிறது. 2

**X. அடிபிறழாமல் எழுதுதல் : 1 × 4 = 4**

39. ‘‘சோதியாய்த் தோன்றும் .....’’ எனத் தொடங்கும் திருவாசகப் பாடல்.

*அல்லது*

‘‘இனிமைத் தமிழ் ..... ’’ எனத் தொடங்கும் பாடல்.

***Ans.* :**

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற்கு அரிய 1
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்த மாகடலே 1
தீது இலா நன்மைத் திருவருள் குன்றே
திருப் பெருந்துறை உறை சிவனே 1
யாதுநீ போவது ஓர்வகை அருளாய்
வந்து நின் இணை அடி தந்தே 1

- மாணிக்கவாசகர்

அல்லது

***Ans.* :**

இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்
கின்பந் தரும்படி வாய்த்த நல்அமுது 2
கனியைப் பழிந்திட்ட சாறு - எங்கள்
கதியில் உயர்ந்திட யாம் பெற்ற பேறு ! 2

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருதல் : $2 \times 4 = 8$**

40. சேதுப்பிள்ளையவர்கள் 'பெருந்தகையர்' என்ற சொல்லைப் பயன்படுத்திய உரையாடலை விளக்குக.

***Ans.* :**

i) தென்னாப்பிரிக்காவில் வாழும் இரண்டு தமிழ்ப் பெரியார்கள் பேராசிரியர் சேதுப்பிள்ளை கண்டு பேச வந்தனர். 1

ii) அன்று வெயில் அதிகமாக வீசியது, வந்தவர்கள் குளிர் நீர் பருகுவதற்கு விரும்பினர், சேதுப்பிள்ளையின் கூசாவின் நீர் முழுவதையும் குடித்து விட்டனர். 2

iii) பின்பு வழக்கம் போல் இந்தித்துறைத் தலைவர் வந்து நின்றார். கூசாவிலோ கொஞ்சமும் நீரில்லை, பேராசிரியர் அவரை நோக்கி இன்று இரு பெருந்தகையர் வந்தனர். அதனால் தண்ணீர் தீர்ந்துவிட்டது என்றார். 1

41. தீப்பெட்டி ஆபீஸிற்குச் சென்று வரும் குழந்தைகள் பற்றி கி.ராஜநாராயணன் கூறியன யாவை ?

*அல்லது*

இலட்சியம் பற்றி வைரமுத்து கூறும் கருத்துக்களைச் சுருக்கி வரைக.

***Ans. :***

i) கரும்பு துண்டை மென்று சாறை விழுங்கிவிட்டு சக்கையைத் துப்புவது போல அந்த பஸ்கள் வெளியே தள்ளுகின்றன. 1

ii) குழந்தைகளை, சில குழந்தைகள் சந்தோஷமாக சிரித்துக்கொண்டே கையிலுள்ள காலித் தூக்குசட்டியை வீசிக் கொண்டே பஸ்ஸிலிருந்து குதிக்கிறார்கள். 1

iii) இன்னும் அவர்களிடம் பால்யமும் சந்தோஷமும் மிச்சம் இருக்கின்றன. இப்போது அவர்களெல்லாம். 1

iv) சீக்கிரம் குளித்துச் சாப்பிட்டு விட்டுப் படுக்க வேண்டும். அவர்களுடைய அவசரம் தெரிகிறது கிராமத்தின் மொத்த முகமும் இப்போது தீவிர மௌனமாகிவிட்டது. 1

அல்லது

***Ans. :***

i) வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடமும் உண்மையானது. அந்த நிமிடங்கள் இலட்சியங்களால் மட்டுமே கௌரவிக்கப்படுகிறது. 1

ii) நிகழ்கால பூமியைச் செதுக்கிக் கொடுத்ததே இறந்த காலத்தின் இலட்சிமும் உழைப்பும் தான் 1

iii) இலட்சியம் இல்லாத வாழ்க்கை ஆணியில் தொங்குகிற சட்டை மாதிரி உள்ளீடற்றுத் தள்ளாடுகிறது. 1

iv) இந்த துறையில் நீ வாழ நினைப்பது உன் விருப்பம், இந்த துறையை வாழ வைப்பது உனது இலட்சியம். 1

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுதல் : 1 × 4 = 4**

42. ''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்

எட்டும் அறிவிலினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி''.

*அல்லது*

''பள்ளம் மேடுள்ள பாதையிலே பார்த்து
நடக்கனும் காளைகளே
பழயை போக்கில் பயனில்லை நல்ல
விஷய மிருக்கனும் மூளையிலே''.

***Ans.* :**

i) பெண்கள் பட்டங்கள் பெறுவதும் சட்டங்கள் தெரிந்தும் உலகத்தில் நடத்த வந்தனர். பெண்கள் அறிவாலும், ஆற்றலாலும் 2

ii) ஆண்களுக்கு சமமாக பெண்கள் சமமாக இருக்கின்றனர் ஆகையால் பெண்கள் எவருக்கு இளைப்பாறு இல்லை என்று கும்மியடித்தனர். 2

அல்லது

***Ans.* :**

i) பள்ளம் மேடு பார்த்து நடக்க வேண்டும் பழைய போக்கிலே போனால் பயனில்லை. 2

ii) மூளையைப் பயன்படுத்த வேண்டும் என்று காளைகளுக்குச் சொல்வது போல் மனிதர்களுக்கு எடுத்துரைக்கிறார். 2

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருதல் : (2 × 2 = 4) 1 × 4 = 4**

உயிர்வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது இயற்கை. நம் உணவு, உடை, உறையுள், உயிர் எல்லாம் இயற்கை தந்த கொடையே. இயற்கை வளங்களை அழித்து சிதைத்தால் நாளடைவில் அவை முற்றிலும் அழிந்து போகும் எனவே மக்கள் இனமாகிய நாம் நம்மை அழியாமல் காப்பாற்ற வேண்டுமென்றால் இயற்கை வளங்கட்டு அழிவு நேராமல் காப்பாற்றியே தீர வேண்டும்.

வினாக்கள் :

**வினாக்கள் :**

43. a) உயிர் வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது எது 2

b) மக்கள் எதை அழியாமல் பாதுகாக்க வேண்டும் ? 2

***Ans.* :**

a) உயிர் வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது இயற்கை நம் உணவு உடை, உரையுள், உயிர் எல்லாம் இயற்கை கந்த கொடையே. 2

b) இயற்கை வளங்களை அழித்து சிதைக்காமல், மக்கள் இனமாகிய நாம் இயற்கை வளங்கட்டு அழிவு நேராமல் காப்பாற்ற வேண்டும். 2

**XIV. மடல் எழுதுதல் : 1 × 5 = 5**

44. உன் பள்ளியில் சுற்றுலா சென்றதை நினைவு கூர்ந்து உன் நண்பனுக்கு கடிதம் வரைக.

*அல்லது*

இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெற தொழிற்சாலைகள் அமைத்துத் தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கடிதம் எழுதுக.

***Ans.* :**

நாள் : 1

இடம் :

அன்புள்ள :

மதிப்பிற்குரிய :

கடிதப் பொருள் : 2

பெறுவோர் முகவரி : 1

இவண்

எழுதுவோர் பெயர் 1

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுல் : 1 × 5 = 5**

45. ''இன்றைய வாழ்வில் ஊடகங்களின் பயன்கள்''

*அல்லது*

''நான் விரும்பும் திருவிழா''.

***Ans.* :**

— தலைப்பிற்கேற்ற முன்னுரை 1

— தலைப்பை ஒட்டிய பக்கத் தலைப்புகள் 1

— கட்டுரையின் நோக்கம் நிறைவுறும் வகையில் வலியுறுத்தல் 2

— முடிவுரை 1